**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : SC.No. 486/2024**
**வழக்கு சாட்சி PW–1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ஜெயக்குமார் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | மோசஸ் | தொழில் | : | வியாபாரம் |
| கிராமம் | : | மாங்குடி | வயது | : | 53 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :**

நான் மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் அரிசி வியாபாரம் செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். எதிரி நாகராஜ் என்னிடம் 10 மூட்டை அரிசி வாங்கினார். அதற்கான பணத்தை தரவில்லை. அரிசிக்கான மொத்த தொகை ரூ.15000/–. எதிரி நாகராஜ் ரூ.1000, ரூ.2000 ஆக மொத்தம் ரூபாய் பத்தாயிரம் கொடுத்திருந்தார். மீதி பணம் ரூபாய் ஐயாயிரம் கொடுக்க வேண்டியிருந்தது. நான் பலமுறை பணத்தை திருப்பி கேட்டும் எதிரி நாகராஜ் பணத்தை கொடுக்கவில்லை.

12.09.2023ம் தேதி, இரவு சுமார் 09.30 மணிக்கு நான் எனது வீட்டின் முன்பு வைத்து எதிரி நாகராஜிடம் பணத்தை கேட்டேன். அதற்கு எதிரி என்னை பார்த்து கண்ட இடத்தில் நீ ஏன் பணம் கேட்கிறாய் என்று சொல்லி என்னை பார்த்து கண்டாரவோலி, தேவடியா மவனே உன்னை பாருடா வைச்சுகிறேன் என்று சொல்லி விட்டு போய் விட்டார். அதன் பின்னர் இரவு சுமார் 10.45 மணியளவில் எதிரிகள் 3 பேரும் எனது வீட்டின்

கேட் பக்கம் வந்து சத்தம் கொடுத்தார்கள். நான் லைட் போட்டு வந்து வெளியே வந்து என்ன என்று கேட்டேன். அப்போது நாகராஜின் மனைவி பாக்கியத்தாய் என்னைப் பார்த்து "உனக்கு ரூபாய் வேண்டுமென்றால் காலையில் கேட்க வேண்டியது தானே" என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் "எனது ரூபாயை கொடுங்கள், நான் இதோடு பேச்சை முடித்து கொள்கிறேன்" என்று சொன்னேன். அதற்கு எதிரி பாக்கியத்தாய் கிறுக்கு தேவடியா மவனே, வெட்டுவோம் என்று சொல்லி அரிவாளை பாக்கியத்தாய் அவரது எதிரி மகன் ரமேஷிடம் கொடுத்தார். ரமேஷ் அந்த அரிவாளால் எனது தலையின் பல இடங்களில் வெட்டினார்.(சாட்சி அவருடைய தலையில் ஏற்பட்ட காயத்தழும்புகளை காண்பித்தார்). பின்னர் எதிரி நாகராஜ் "நீ சாவுடா" என்று சொல்லி இடது, வலது கைகளின் தோள்பட்டைக்கு அருகிலும், முதுகிலும் கத்தியால் குத்தினார். .(சாட்சி அவருடைய வலது, இடது கை தோள்பட்டைக்கு அருகிலும், முதுகிலும் ஏற்பட்ட காயத்தழும்புகளை காண்பித்தார்). பின்னர் 108 ஆம்புலன்ஸ் மூலம் இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தார்கள். என்னுடன் எனது மனைவியும் வந்தார். அதன் பின்னர் மேல்சிகிச்சைக்காக திருநெல்வேலி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அங்கு நான் 8 நாட்கள் சிகிச்சை பெற்றேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்திலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அந்த புகார் வாக்குமூலத்தை நான் திருநெல்வேலி அரசு மருத்துவமனையில் வைத்து கொடுத்தேன். அந்த புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆகும். என்னிடம் காண்பிக்கப்படும் அரிவாள் மற்றும் கத்தியால் தான் எதிரிகள் நாகராஜ் மற்றும் ரமேஷ் தாக்கினார்களா? என்றால் சரியாக என்னால் சொல்ல முடியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :**

இல்லை.

J CHRISTAL BABITHA
Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:57:45 +0530

**<u>வாக்குமூலம்</u>**

**<u>தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.</u>**

**<u>வழக்கு எண் : SC.No. 486/2024</u>**

**<u>வழக்கு சாட்சி PW-2</u>**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கண்ணன் | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | சுந்தரக்கனி | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | மாங்குடி | வயது | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of January 28th, 2026.

**(எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை :</u>**

நான் மாங்குடியில் குடியிருந்து வருகிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 ஜெயக்குமாரை எனக்கு தெரியும். அவர் அரிசிக்கடை வைத்திருந்தார். 12.09.2023 ம் தேதி, இரவு 11.00 மணிக்கு நான் எனது வீட்டின் பக்கம் இருந்தேன். ஜெயக்குமார் வீட்டு பக்கம் சத்தம் கேட்டது. நானும், ஆரோக்கியம் என்பவரும் ஜெயக்குமாரின் வீட்டு பக்கம் வந்தோம். அப்போது எதிரி பாக்கியத்தாய் அரிவாளை அவரது மகன் ரமேஷிடம் கொடுத்து ஜெயக்குமாரை வெட்டச்சொன்னார். எதிரி ரமேஷ் ஜெயக்குமாரின் கழுத்தில் வெட்டபோனபோது, ஜெயக்குமார் குனிந்து கொண்டதினால் அந்த வெட்டு தலையில் பட்டது. மீண்டும் எதிரி ரமேஷ் ஜெயக்குமாரின் தலையில் வெட்டினார். ஜெயக்குமாரின் தலையில் 4 வெட்டுக்கள் பட்டது. எதிரி நாகராஜ் கத்தியால் ஜெயக்குமாரின் முதுகு பகுதியிலும், இரண்டு கை தோள்பட்டைக்கு அருகிலும் குத்தினார். நானும், ஆரோக்கியம் என்பவரும்

தடுத்தோம். பின்னர் எதிரிகள் "நீ உயிரோடு இருந்தால் தானே பணம் கேட்பே, தேவடியா மவனே" என்று கெட்ட வார்த்தைகளால் திட்டி விட்டு சென்றார்கள். பின்னர் ஜெயக்குமாருக்கு இரத்தம் அதிகமாக வந்ததினால் 108 ஆம்புலன்ஸில் இராஜபாளையம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். அவருடன் அவருடைய மனைவி சென்றார். போலீசார் இது சம்பந்தமாக விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை :</u>**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.02.04 10:57:52 +0530